**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் இந்தக் கூட்டத் தொடரை தொடங்கி வைத்து, இந்த மாமன்றத்தில் எனது முதல் உரையை ஆற்றுவதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இத்தருணத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்தின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் இந்தப் புத்தாண்டு வழிவகுக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

**2.** அனைத்து மக்களையும் உள்ளடக்கிய சமூக, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அவர்களின் நலனை மேம்படுத்துவதையே அரசு நிர்வாகத்தின் முக்கியக் கொள்கையாகக் கொண்டு,

**மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது. **மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா** அவர்கள் கண்ட தொலைநோக்குப் பார்வையை வழிகாட்டியாகக் கொண்டு, தமிழ்நாட்டை உன்னதமான மக்கள் நலன் பேணும் மாநிலமாக உருவாக்குவதற்கு அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் இந்த அரசு வழுவாது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனவே, பொருளாதாரச் செழுமையுடன் சமூக நீதியையும் அனைவரும் பெறுவதற்கான திட்டங்களையும், கொள்கைகளையும் இயற்றி, அவற்றை செம்மையாகச் செயல்படுத்தி சிறந்ததொரு ஆட்சியை இந்த அரசு தொடர்ந்து வழங்கும் என நான் நம்புகிறேன்.

**3.** நமது நாட்டின் வரலாற்றில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையினை 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1–ஆம் தேதி முதல் செயல்படுத்தியது உட்பட பல முக்கிய நிகழ்வுகளைச் சந்தித்த ஒரு ஆண்டாக கடந்த 2017 ஆம் ஆண்டு அமைந்தது.

மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட சிறப்பு முன்னேற்பாடுகளால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை சிரமமின்றி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மாநில அரசிற்கான வருவாயில் இழப்பு ஏற்படும் சூழல் இருந்தபோதிலும், முக்கியத்துவம் வாய்ந்த இந்த வரிவிதிப்பு முறையை உறுதியுடன் செயல்முறைக்கு கொண்டு வந்து, இந்த மாபெரும் மாற்றத்திற்கு வழிவகுத்ததற்காக தமிழ்நாடு அரசை நான் உளமாரப் பாராட்டுகிறேன். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையை நடைமுறைப்படுத்துவதால் மாநில அரசின் வரி வருவாயில் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடுசெய்து, மாநிலங்களின் நிதி நிலையை உறுதிப்படுத்த வழிவகுத்த மத்திய அரசிற்கு இந்த அரசு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. வரி விதிப்பு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தினால், தேசிய அளவிலும், தமிழ்நாட்டிலும் நீண்டகால அளவில் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**4.** நிதிநிலை மேலாண்மையில் தமிழ்நாடு அரசு மிகப் பொறுப்புடனும், கவனத்துடனும் செயல்பட்டு வருவதால், பொருளாதார மந்தநிலை போன்ற கடுமையான சூழ்நிலைகளையும் இந்த அரசு சமாளித்து வந்துள்ளது. மாநில வருவாயில் எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்டுள்ளபோதும், மாநிலத்தின் நிதிநிலை சீராகவும் சிறப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வருவாய் வரவுகளின் வளர்ச்சி குறைந்து, வருவாய்ப் பற்றாக்குறை கடுமையாக உயர்ந்து வரும் நிலையிலும் கூட, நிதிப் பற்றாக்குறையையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதத்தையும் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இந்த அரசு தொடர்ந்து கட்டுப்படுத்தி வருகிறது. தற்போது நிலவி வரும் கடுமையான நிதி நெருக்கடியையும் சமாளித்து, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. அதே வேளையில், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைக்

குறைக்காமல் அத்திட்டங்களையும் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**5.** மத்திய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் பகிர்வு மற்றும் மானியங்கள் குறித்து பரிந்துரைகளை வழங்க, பதினைந்தாவது நிதிக்குழுவை மத்திய அரசு அண்மையில் அமைத்துள்ளது. கடந்த காலங்களில், மத்திய நிதிக்குழுக்களின் பரிந்துரைகள் தமிழ்நாட்டிற்கு பாதகமான முறையிலேயே அமைந்திருந்தன. குறிப்பாக, பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, மத்திய அரசின் வரி வருவாய்ப் பகிர்வில் மாநிலங்களுக்கான பங்கு **32** சதவீதத்திலிருந்து **42** சதவீதமாக உயர்த்தப்பட்ட போதிலும், தமிழ்நாட்டிற்கான பங்கு **4.969** சதவீதத்திலிருந்து **4.023** சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதனால், தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் சுமார் **6,000** கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. அதே நேரத்தில், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்கான அதன்

நிதிப் பங்கீடும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றத் தேவையான கூடுதல் நிதியை மாநில அரசுகள் தங்களது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தே ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய வரி வருவாய்ப் பகிர்வில் எந்தவிதக் கூடுதல் பலனும் நமது மாநிலத்திற்கு கிடைக்கப் பெறாத நிலையில், மாநில அரசு தனது சொந்த வரி வருவாயிலிருந்தே இந்தக் கூடுதல் நிதிச்சுமையை ஏற்க வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில், திரு. என்.கே.சிங் தலைமையிலான பதினைந்தாவது நிதிக்குழு, தமிழ்நாட்டு மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான வருவாய்த் தேவைகளை உணர்ந்து, தமிழ்நாட்டிற்கு உரிய, நியாயமான பங்கை வழங்கப் பரிந்துரைக்கும் எனவும், இதன் மூலம் கடந்த நிதிக்குழுக்களால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அநீதி சரி செய்யப்படும் எனவும் இந்த அரசு நம்புகிறது.

**6.** அண்மையில் வீசிய ‘ஓகி’ புயலின்போது நடுக் கடலில் தத்தளித்த மீனவர்களைக் காப்பாற்றுவதில், மத்திய அரசுடன் இணைந்து இந்த அரசு எடுத்த தீவிர முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். உரிய தருணத்தில், இந்தியக் கடற்படை, கடலோரப் பாதுகாப்புப்படை, விமானப்படை உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு முகமைகள் தமிழ்நாடு அரசுடன் இணைந்து எடுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகளால், மாநிலம் சந்தித்த பேரிடரின் தாக்கத்தைக் குறைக்க வழிவகை ஏற்பட்டது. கன்னியாகுமரிக்கு வருகை தந்து ‘ஓகி’ புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் மீட்பு நடவடிக்கைகளுக்கும், அவர்களின் மறுவாழ்விற்கும் மத்திய அரசின் உறுதியான ஆதரவை வெளிப்படுத்தி, தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக **133** கோடி ரூபாயை முன்பணமாக வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விழைகிறேன். ‘ஓகி’ புயலின் உடனடி நிவாரணத்திற்கு **401** கோடி ரூபாயும், நீண்டகால நிவாரணத்திற்கு **4,854** கோடி ரூபாயும் மாநில அரசு கோரியுள்ள நிலையில்,

கள ஆய்வு செய்துள்ள மத்தியக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, கோரிய நிவாரண நிதியை மத்திய அரசு விரைவில் விடுவிக்க வேண்டுமெனக் கோருகிறேன். இந்தப் புயலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கும் கருணையுடன் உதவித்தொகையை இந்த அரசு வழங்கியதுடன், பயிரிழப்பிற்கான உள்ளீட்டு மானியத்தையும், இரப்பர் மற்றும் வாழைமரக் கன்றுகளை மீண்டும் நடுவதற்கான நிதியுதவியையும் இந்த அரசு வழங்க ஆணையிட்டுள்ளது. காணாமல் போன கடைசி மீனவரை கண்டுபிடிக்கும்வரை மீட்பு நடவடிக்கைகளைத் தொடர இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

7. இந்த அரசிற்கு வழிகாட்டும் ஆவணமாக அமைந்துள்ள, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் உருவாக்கிய, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளையும் நோக்கங்களையும் எய்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. சுகாதாரம், கல்வி,

குழந்தைகள் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற சமூகநலத் துறைகளில் தமிழ்நாடு அரசு பெரிய அளவில் முதலீடுகள் செய்து வருகிறது. இத்தகைய உறுதியான முயற்சிகளால், திறன்மிகு இளைஞர்களைக் கொண்ட ஆரோக்கியமான சமுதாயமாக தமிழ்ச் சமுதாயம் உருவாகியுள்ளதுடன், முதியோர் மற்றும் நலிவடைந்த பிரிவினரும் பொருளாதாரப் பாதுகாப்பைப் பெறுவதற்கும் வழிவகை ஏற்பட்டுள்ளது. இதனால், மனிதவளக் குறியீடுகளில், நாட்டிலேயே தொடர்ந்து உயர்ந்த நிலையில் தமிழ்நாடு திகழ்ந்து வருவதில் வியப்பில்லை.

8. மாநிலம் முழுவதும் சமச்சீரான பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்த 'மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்தினை' இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசு தொடங்கிய புதுமையான திட்டங்களுள் ஒன்றான இத்திட்டத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய 105 வட்டாரங்களின் வளர்ச்சிக்கு, 348.71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, 548 திட்டங்களுக்கு அரசு இதுவரை ஒப்புதல் வழங்கியுள்ளது. மலைப் பகுதிகளில்

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினையும்' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கும், மாநிலத்திற்குள் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், இவ்விரு திட்டங்களும் பேருதவியாக அமைந்துள்ளன.

**9.** தமிழ்மொழியைப் பேணிக் காப்பதில் முனைப்புடன் செயல்பட்டு, உலகம் முழுவதும் தமிழ்மொழியின் ஆளுமை பரவ இந்த அரசு வழிவகுத்து வருகிறது. தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையினை நிறுவிட 10 கோடி ரூபாயை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவை நான் பாராட்டுகிறேன். மேலும் **சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர்** அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள விருது, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பெரும்

பங்கினைப் பாராட்டிப் பறைசாற்றுவதாக அமைவதுடன், அறிவியல், சமத்துவம் மற்றும் தொழிலாளர் நலன் குறித்த கருத்துகளை வெளிக்கொணரும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் இந்த விருது உதவும்.

**10.** மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆழ்ந்த அறிவும், உள்ளார்ந்த சிந்தனைகளுமே இந்த அரசுக்கு தொடர்ந்து வழிகாட்டியாக அமைந்து வருகிறது. தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் அவர் ஆற்றிய அரும் பணிகள், எடுத்த துணிச்சலான முடிவுகள், உன்னதமான மக்கள் பணிகள் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் சமகால வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அவரின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, மெரினா கடற்கரையில் மிகப்பெரிய நினைவு மண்டபத்தினை அமைக்க இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதையும், அவர் வாழ்ந்த

சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள ‘வேதா நிலையம்’ இல்லத்தை அரசுடைமையாக்கி, அவரது நினைவிடமாக மாற்றவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**11.** இலங்கைத் தமிழரின் நலனுக்காக எப்பொழுதும் குரல் கொடுத்து வரும் இந்த அரசு, அவர்கள் கண்ணியத்துடனும், பொருளாதாரப் பாதுகாப்புடனும், உரிய அரசியல் உரிமைகளுடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென்று மத்திய அரசையும், பன்னாட்டு சமுதாய அமைப்புகளையும் இந்த அரசு கேட்டுக் கொள்கிறது. அதே வேளையில், இலங்கைத் தமிழர்கள் மீதான இனப் படுகொலை புரிந்த குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**12.** பொருளாதார மேம்பாட்டிற்கு இன்றியமையாத சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு அரசு

தனிக்கவனம் செலுத்தி வருகிறது. நவீன தொழில்நுட்ப சாதனங்களையும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் அளித்து, மாநிலக் காவல்துறையை இந்த அரசு தொடர்ந்து நவீனப்படுத்தி வருகிறது. இனவாத, தீவிரவாத மற்றும் மத அடிப்படைவாத சக்திகளுக்கு இடம் கொடுக்காமல் தடுத்து வரும் இந்த அரசையும், தமிழ்நாட்டு மக்களையும் நான் பாராட்டுகிறேன். தமிழ்நாடு காவல்துறை, சமூகவிரோத மற்றும் நக்சலைட் அமைப்புகளை தீவிரமாகக் கண்காணித்து, அவர்களின் சமூகவிரோதச் செயல்களை முளையிலேயே அழித்து வருகிறது. சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை தொடர்ந்து சிறப்பாக நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**13.** பாக் வளைகுடாப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திட மாநில அரசு தொடர்ந்து பாடுபடும். மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக,

இந்திய மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல்கள் ஓரளவு குறைந்துள்ளன. இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்யவும், பிடித்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையில், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க, ஏற்கனவே உள்ள சாதாரண மீன்பிடிப் படகுகளை, ஆழ்கடல் சூரை மீன்பிடித் தூண்டில் படகுகளாக மாற்றுவதற்கான மாநில அரசின் முயற்சிகளுக்கு 200 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ள மத்திய அரசிற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிட, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை திரும்பப் பெற்று, இலங்கை அரசிடமிருந்து கச்சத்தீவை மீட்பதே நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினை ஏற்று செயல்படுத்த,

மத்திய அரசிடம் இந்த அரசும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**14.** அரசின் சேவைகளை எவ்விதத் தடையுமின்றி பொதுமக்கள் எளிதாகப் பெறுவதற்கு அரசின் இ–சேவை மையங்கள் வழிவகை செய்து வருகின்றன. இம்மையங்களின் மூலமாக 190 சேவைகளுக்கு மேல் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்த நாள் முதல் இதுவரை, இ–சேவை மையங்களில் 4.53 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் அனைத்து அரசு சேவைகளையும் ஒரே இணையதள வழியாகப் பெற்றிட, தொலைநோக்குடன் கூடிய மின்னாளுமைக் கொள்கையினை இந்த அரசு வெளியிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 300 சேவைகளையும், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் அனைத்து அரசு சேவைகளையும் வழங்க வழிவகை செய்யப்படும். நிலப் பதிவேடுகள் நவீனப்படுத்துதல் திட்டத்தின் கீழ், இணையவழி பட்டா மாறுதல் செய்திடும் வகையில்,

நிலப் பதிவேடுகளும், நில வரைபடங்களும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. இந்த இணையவழி பட்டா மாறுதல் செய்யும் முறை, நிலப் பதிவேடுகள் முழுவதும் வெளிப்படையாகவும், நம்பகத்தன்மையுடனும் பராமரிக்கப்படுவதற்கும், பொதுமக்கள் இச்சேவைகளை எளிதில் பெற்றிடவும் வழிவகுத்துள்ளது.

**15.** பொருளாதார வளர்ச்சியின் பலன் கிராமப்புற மக்களிடமும் சீராகச் சென்றடைவதற்கு வேளாண் மற்றும் வேளாண்துறை சார்ந்த தொழில்களின் வளர்ச்சி பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. அதனால், விவசாயிகளின் வருவாயையும், வேளாண் உற்பத்தித் திறனையும் பெருக்குவதற்கு பன்முக அணுகுமுறைகளை மாநில அரசு கையாண்டு வருகிறது. விவசாயத்தில் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல், நுண்ணீர்ப் பாசன வசதியை மிகப்பெரிய அளவில் ஊக்குவித்தல் போன்றவற்றிற்கு மானியங்கள் வழங்குவதன் மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

மானாவாரி விவசாயம் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் ஒருங்கே தீர்ப்பதற்காக, தொகுப்பு அடிப்படையிலான '**நிலையான மானாவாரி வேளாண்மைக்கான இயக்கத்தினை**' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வியக்கத்தின் விளைவாக, 2017–18 ஆம் ஆண்டில் சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் உள்ளிட்ட உணவுப் பயிர்களின் சாகுபடிப் பரப்பளவு 74.6 இலட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது. சிறு, குறு விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம், அவர்களின் கூட்டமைப்பு ஆற்றலை அதிகரித்து, பெரிய அளவிலான விவசாய சாகுபடியின் பயன்களை அவர்களும் பெற்றுப் பயனடைய '**கூட்டுப் பண்ணையம்**' என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தென்னை மர விவசாயிகளின் வருவாயைப் பெருக்க, தென்னை மரத்திலிருந்து 'நீரா' பானத்தை தயாரிக்க இந்த அரசு அனுமதி அளித்துள்ளது பாராட்டத்தக்கது. **மற்றுமொரு முன்முயற்சியாக, வேளாண் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க, கலப்புப் பண்ணைய முறையை (Mixed farming)**

**ஊக்குவிக்கும் வகையில் 'ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்தை' வரும் வரவு–செலவுத் திட்டத்தில் இந்த அரசு அறிமுகப்படுத்தும்.**

**16.** 'பழங்கள், காய்கறிகள் போன்ற எளிதில் அழுகக்கூடிய பொருட்களுக்கான விநியோகத் தொடரமைப்பு மேலாண்மைத் திட்டத்தை' **10** மாவட்டங்களில் **398.75** கோடி ரூபாய் செலவில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் விளைபொருட்களை **487** சேகரிப்பு மையங்கள் மூலமாக ஒன்று சேர்த்து, **29** முதன்மை பதப்படுத்தும் மையங்கள் மூலமாகப் பதப்படுத்தி, **34** முதன்மைச் சந்தைகள் வாயிலாக விற்பனை செய்யும் வகையில், போக்குவரத்து, குளிர்பதன வசதிகள் மற்றும் சேமிப்புக் கிடங்கு வசதிகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த விநியோகத் தொடரமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, **102.84** கோடி ரூபாய் மதிப்பீட்டில், **30** ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் **8** வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு

விற்பனைச் சங்கங்களில் மின்னணு வர்த்தக வசதிகளை (e-Trading) ஏற்படுத்தி, அவற்றை மேம்படுத்துவதற்கு அரசு எடுத்து வரும் முயற்சிகள் மூலம் நமது சந்தைகளை நவீனப்படுத்துவதுடன், அவற்றை தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்கவும் வழிவகை ஏற்படும்.

17. பருவமழையினை பெரிதும் நம்பியுள்ள விவசாயத்தின் நிலையற்ற தன்மையை நன்கு உணர்ந்த இந்த அரசு, பருவநிலையால் ஏற்படும் பேரிழப்பை ஈடுசெய்ய எடுத்த தொடர் முயற்சியின் விளைவாக, 2016–17 ஆம் ஆண்டில் ‘பிரதம மந்திரியின் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில்’ 15.36 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டனர். இந்த மாபெரும் முயற்சியால், மத்திய அரசின் இம்முக்கியத் திட்டத்தைச் செயல்படுத்தும் மாநிலங்களுள் தமிழ்நாடு உயர்ந்த இடத்தை அடைந்துள்ளது. இதன் பலனாக, கடந்த ‘ரபி’ பருவத்தில் வறட்சியின் காரணமாக நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள் மற்றும் பிற பயிர்களில் ஏற்பட்ட இழப்பிற்கு, இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட

விவசாயிகளில், **9.28** இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீடு அனுமதிக்கப்பட்டு, இதுவரை **2,478** கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. **வரும் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தி, இத்திட்டத்தின் பலனைப் பரவலாக்க உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.**

18. ஊரகப் பொருளாதாரத்திற்கு ஒரு உந்துசக்தியாக கால்நடை பராமரிப்புத் துறை திகழ்வதால், விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றத்தை இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு அடிப்படையாக விளங்கும் கால்நடை மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

19. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் சட்டரீதியான உரிமையை நிலைநாட்டுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் அயராத முயற்சிகளின் காரணமாகவே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தி, வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை படைக்கப்பட்டது. இந்த அணையின் நீர்மட்டத்தை, முழுக் கொள்ளளவான 152 அடி வரை மேலும் உயர்த்துவதற்கு இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும். காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் விரைந்து அமைக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் நியாயமான நீண்டகாலக் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கோதாவரியிலிருந்து வெளியேறும் உபரி நீரைத் திருப்பி, கோதாவரி–கிருஷ்ணா–பெண்ணாறு–பாலாறு–காவேரி நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழ், காவேரியில் கல்லணைக்கு அருகில் 125 டி.எம்.சி அடி நீர்

தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் வகையில், மாநிலங்களுக்கு இடையே நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு தனது முழு ஆதரவைத் தருவதாக, நீராதாரங்களுக்கான மாண்புமிகு மத்திய அமைச்சர் தெரிவித்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் என்ற கனவு நிறைவேற, இந்த முயற்சி மாபெரும் ஊக்கத்தை அளிக்கும் என நான் நம்புகிறேன்.

**20.** மாநிலத்தின் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து திறம்பட நீர் மேலாண்மை செய்வதற்காக, இந்த அரசு, '**குடிமராமத்து**' முறைக்கு புத்துயிரூட்டி, அனைத்து மாவட்டங்களிலும் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. குடிமராமத்து முறையைச் செயல்படுத்துவதிலும், ஏரி மற்றும் குளங்களில் உள்ள வண்டல் மண்ணை விவசாய நிலத்தின் வளத்தை மேம்படுத்துவதற்காக விவசாயிகள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி எடுத்த முயற்சிகளால், இந்தப் பருவமழைக் காலத்தில் அதிகளவு நீரை நாம் சேமிக்க முடிந்தது.

வரும் ஆண்டுகளில் இத்திட்டத்தை கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன், மேலும் முனைப்புடன் செயல்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஏரிகளைப் புனரமைப்பதற்காகவும், நிலத்தடி நீரை செறிவூட்டுவதற்காகவும் உலக வங்கி நிதியுதவியுடன் 'தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தை' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. காவேரி டெல்டாவில் வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில், பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இந்த அரசு செயல்படுத்தி வரும் 'பருவநிலை மாற்றத் தழுவல் திட்டம்' மாநிலத்தின் நிலத்தடி நீர் ஆதாரத்தை மேலும் செறிவூட்டும்.

**21.** அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் முன்னுதாரணமான மக்கள் நல அரசாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. தகுதியான அனைத்து குடும்ப

அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி மற்றும் மானிய விலையில் சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை தொடர்ந்து வழங்கி வருவதன் மூலம், இந்த அத்தியாவசியப் பொருட்களின் சந்தை விலையில் ஏற்படும் விலை ஏற்றத்திலிருந்து ஏழை மக்களை இந்த அரசு பாதுகாத்து வருகிறது. **கடந்த ஆண்டைப் போன்றே, இவ்வாண்டும் அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் இதரப் பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.** பொது விநியோகத் திட்டத்தின் கீழ், சேவைகள் மற்றும் பொருள் விநியோகம் வெளிப்படையாகவும், தங்குதடையின்றியும் நடைபெறுவதை உறுதிப்படுத்த இந்த அரசு பெருமுயற்சி செய்துவருகிறது. அதன் ஒரு பகுதியாக, அனைத்து குடும்ப அட்டைகளுடனும் ஆதார் எண்ணை இணைக்கும் இந்த அரசின் முயற்சி அனைத்துத் தரப்பு மக்களாலும் வெகுவாக வரவேற்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒரு கோடியே 94 இலட்சம்

குடும்பங்களில், இதுவரை ஒரு கோடியே 88 இலட்சம் குடும்பங்களுக்கு ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது.

22. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான நடவடிக்கைகளால், மாநிலத்தின் மின் பற்றாக்குறை நிலை மாறி, மின்மிகை மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகியுள்ளது. அனல் மின் உற்பத்தித் திறனை மேலும் 13,000 மெகாவாட் அளவிற்கு உயர்த்துவதற்கு மாநில அரசு அயராது பாடுபடும். 6,200 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் அலகுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதுதவிர, 9,300 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தி செய்யக்கூடிய அலகுகளை நிர்மாணிப்பதற்கான பணிகளும் பரிசீலனையில் உள்ளன. நாட்டின் மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறனில், 18 சதவீதத்தை தமிழ்நாடு பெற்றிருப்பதன் மூலம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் நாட்டிலேயே தமிழ்நாடு

முன்னணியில் உள்ளது. மாநில அரசு கடுமையான நிதிநிலையை சந்தித்து வந்த போதிலும், மத்திய அரசின் உதய் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் **22,815** கோடி ரூபாய் கடனை மாநில அரசு ஏற்றுக்கொண்டதால், அந்நிறுவனத்தின் நிதி நிலைமை சீரமைக்கப்பட்டுள்ளது.

**23.** சீரான திறன்மிகு போக்குவரத்துத் தொடரமைப்பை ஏற்படுத்தி, பல்வேறு பகுதிகளுக்கு இடையே திறம்பட சரக்கு மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்ய வழிவகுத்து, பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்க, உயர்தரமான சாலை உட்கட்டமைப்பு அவசியம் என்பதை மாநில அரசு உணர்ந்துள்ளது. எனவே, சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், 'ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் முக்கியமான சாலை உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், புதுமையான முயற்சியாகக் கொண்டுவரப்பட்டுள்ள 'செயல்பாட்டு

அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை’, முக்கியமான சாலைக் கட்டமைப்புகளை உயர்தரத்துடன் பராமரிப்பதற்கு வழிவகை செய்துள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ‘தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்’ இரண்டாம் கட்டப் பணிகளும் முக்கிய இணைப்புச் சாலைகளை மேம்படுத்த உதவி வருகின்றன. கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து, 7,964 கிலோ மீட்டர் நீளமுள்ள 2,596 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்த அரசு முடிவு செய்து, நெடுஞ்சாலைத் துறைக்கு இச்சாலைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து மாற்ற உத்தரவிட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் முதற்கட்டமாக, 2017–18 ஆம் ஆண்டில், 1,436 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை 608 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**24.** கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்குவழி தேசிய நெடுஞ்சாலையாக மேம்படுத்துவதற்கான திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, இதனை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி மேம்படுத்துவதற்கு, கொள்கை அளவிலான ஒப்புதலை மாநில அரசு ஏற்கனவே வழங்கியுள்ளது. கிழக்கு கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை 45A -வை நான்குவழிச் சாலையாக முதற்கட்டத்தில் மேம்படுத்துவதற்கான திட்ட அறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அடுத்த கட்டத்தில், நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரை அமைந்துள்ள மீதமுள்ள சாலைகளும், தேசிய நெடுஞ்சாலைத் துறையால் மேம்படுத்தப்படும். அண்மையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து நேரடியாக எடுத்துரைத்துள்ளார்கள். மாநிலத்தின் இந்த நீண்டகால

கோரிக்கையை மத்திய அரசு விரைவில் நிறைவேற்றும் என நம்புகிறேன்.

**25.** வறுமை, வேலையின்மை ஆகிய இரட்டைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இந்த அரசு, அதற்கான திட்டங்களை ஒருங்கிணைத்து, முறையாகச் செயல்படுத்தி வருகிறது. வறுமையை ஒழிக்க, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 'புதுவாழ்வுத் திட்டத்தைப்' போன்றே, சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்தி, வங்கி இணைப்பின் மூலம் கடன்பெற அரசு வழிவகை செய்து வருகிறது. இந்த முயற்சிகளின் அடுத்த கட்ட நடவடிக்கையாக, உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள 'தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தின்' கீழ், கிராம அளவில் சுய உதவிக்குழுக்களால் இயக்கப்படுகின்ற சிறுதொழில்களை சீரிய முறையில் ஒருங்கிணைத்து, உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனங்கள் (Producer Companies) உருவாக்கப்படும். மாநிலத்தில் உள்ள

26 மாவட்டங்களில், தொழில் முனைதல் மற்றும் ஊரகத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கு உலக வங்கி 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனுதவியாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதுபோன்றே, தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலமாகவும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலமாகவும், நகர்ப்புரங்களிலும் புதிய சுய உதவிக்குழுக்களை உருவாக்கும் நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

**26.** இளைஞர்கள் வேலை பெறுவதற்கான திறனில் உள்ள தேவையைக் கண்டறிந்து பயிற்சி அளிப்பதற்கு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. சீமென்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, அண்ணா பல்கலைக்கழகத்தில் மேம்பட்ட திறனை பட்டதாரி இளைஞர்கள் வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சியளிக்கும் திட்டத்தை

இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவியுடன், வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், சுகாதாரம், தளவாடங்கள் மற்றும் கனரகப் பொருட்களின் உற்பத்தி ஆகிய ஐந்து கண்டறியப்பட்ட துறைகளில், தமிழ்நாட்டில் கள அளவில் உள்ள பயிற்சி மையங்களை ஒருங்கிணைத்து மாநில அளவில் உயர்மட்ட பயிற்சி மையங்களை உருவாக்குவதற்கான பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தொழில்துறை கூட்டமைப்புகளால் நிர்வகிக்கப்படும் இந்த உயர்மட்ட பயிற்சி மையங்கள், கள அளவிலான பயிற்சி மையங்களை ஒருங்கிணைப்பதுடன், பயிற்சியாளர்களுக்கு பயிற்றுநர் பயிற்சியையும் அளித்து, இளைஞர்களை எளிதில் தொழிற்சாலைகளில் பணியில் அமர்த்த அவர்களுக்குத் தேவையான உயர்திறன் பயிற்சியையும் அளிக்கும். படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவும், மாநிலத்தில் திறன் பற்றாக்குறையைக் குறைக்கவும் இந்த அணுகுமுறை உதவும் என நான் நம்புகிறேன்.

**27.** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்டு, அவரது தனிப்பட்ட முனைப்புடனும், கவனத்துடனும் செயல்படுத்தப்பட்டு வரும் ‘தூய்மை இந்தியா இயக்கத்தில்’ சிறப்பான பங்களிப்பை நல்கி வரும் தமிழ்நாடு அரசையும் தமிழ்நாட்டு மக்களையும் பாராட்டுகிறேன். மாநிலத்தில் நான் மேற்கொண்டு வரும் சுற்றுப்பயணத்தின்போது, இந்த இயக்கத்தினை திறமையாகச் செயல்படுத்த இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை நான் நேரில் காண முடிந்தது. தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், கிராமப்புறங்களில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே இல்லாத மாவட்டங்களாக, இதுவரை **16** மாவட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன என்பது ஒரு பாராட்டத்தக்க சாதனையாகும். தூய்மை இந்தியா இயக்கத்தின் உயரிய தேசிய குறிக்கோள்களை தமிழ்நாடு அரசு சிறப்பான வகையில் அடையும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

**28.** வளர்ந்து வரும் நகர்ப்புர மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மாநில அரசு உறுதியாக உள்ளது. மத்திய அரசின் 'திறன்மிகு நகரங்கள்' மற்றும் 'அம்ருத்' திட்டங்கள் முழு ஆர்வத்துடனும் உத்வேகத்துடனும் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 10 மாநகரங்களையும், அம்ருத் திட்டத்தின் கீழ் 33 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளையும் சேர்க்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை, திறன்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் 828 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்தின் கீழ் 951 கோடி ரூபாயும் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு நிதியுதவியாக விடுவித்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டமும்',

மாநிலத்தில் நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு மேலும் உந்துதல் அளித்து வருகிறது.

**29.** மாநிலத்தில் குடிசைகள் இல்லா கிராமங்களையும், குடிசைப் பகுதிகள் இல்லா நகரங்களையும் உருவாக்கும் குறிக்கோளை அடையும் வகையில், தமிழ்நாட்டில் நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில், வீடுகளுக்கான தேவைக்கும் அதை நிறைவு செய்வதற்கான திறனிற்கும் உள்ள இடைவெளியைப் போக்குவதற்காக, ஏழைகளுக்கான வீட்டு வசதி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் (ஊரகம்)' மற்றும் மாநில அரசின் முன்னோடித் திட்டமான 'முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்' ஆகிய திட்டங்களின் மூலமாக, கிராமப்புற மக்களுக்கு விலையில்லா வீட்டு வசதி வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் திகழ்ந்து வருகிறது. 'பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டம் (நகர்ப்புரம்)' திட்டத்தின் கீழ், இதுவரை **14,462** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **3.84** இலட்சம் வீடுகள் கட்டுவதற்காக

மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக, இதுவரை 1,498 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளதற்காக மத்திய அரசிற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**30.** நகர்ப்புர ஏழை எளிய மக்களுக்கான வீட்டுவசதியை ஏற்படுத்துவதற்கான நிதியைத் திரட்ட, அரசு ஏற்கனவே ‘உறைவிட நிதியத்தை’ (Shelter fund) உருவாக்கியுள்ளது. நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரில் ‘உறைவிடக் கட்டணம்’ விதிக்க வகை செய்யும் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்படும். சாலை விரிவாக்கம் போன்ற நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நிலங்களைத் தருபவர்களுக்கு, அதற்கான தக்க இழப்பீடு ‘மாற்றத்தக்க மேம்பாட்டு உரிமைகள்’ (Transferable Development Rights) மூலம் அளிப்பதற்கு சட்டபூர்வ அதிகாரம் பெறும் வகையில், 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தில், தக்கவாறு திருத்தங்கள் கொண்டு வரப்படும். மாற்றத்தக்க மேம்பாட்டு உரிமைகளுக்கான இரண்டாம் நிலை

சந்தையை (Secondary Markets) ஏற்படுத்த தகுந்த நெறிமுறைகள் வகுக்கப்படும். 'கட்டடம், மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தை' பாராளுமன்றம் நிறைவேற்றியதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசும் இதற்கான விதிமுறைகளை வகுத்துள்ளது. இம்முயற்சிகளின் விளைவாக, கட்டடம் மற்றும் மனை விற்பனைகள் முறைப்படுத்தப்படுவதுடன், வாடிக்கையாளர் நலனும் பாதுகாக்கப்படும்.

**31.** சென்னைப் பெருநகர மக்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக உருவெடுத்துள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டம், மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் மீதமுள்ள சுரங்க வழித்தடங்களும் 2018 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பயன்பாட்டிற்கு வரும். வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையிலான 9 கிலோ மீட்டர் நீளத்திற்கான முதற்கட்டத்தின் விரிவாக்கப் பணிகளும் விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மெட்ரோ

இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மேலும் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களை 107.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஏற்படுத்துவதற்காக, 79,962 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டத்திற்கு அயல்நாட்டு முகமையின் நிதியுதவியைப் பெறுவதற்காக மாநில அரசு அனுமதி வழங்கி மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்நிலையில், சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்கு விரைவில் ஒப்புதல் வழங்கவேண்டும் என மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

**32.** தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் நடைமுறைகளை மேலும் எளிதாக்குவதற்கு இந்த அரசு உறுதியாக உள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதன் முதற்கட்டமாக, 2017ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 28 ஆம் நாளன்று, ‘2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் அவசரச் சட்டம்’ பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த அவசரச் சட்டத்தினை, சட்டமாக்குவதற்கான சட்ட முன்வடிவு, இந்த சட்டமன்ற

கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. மேலும், அமைப்புரீதியான ஒரு முக்கிய சீர்திருத்த முயற்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2017 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 2 –ஆம் நாளன்று இணையதள வழி ஒற்றைச் சாளர அமைப்பைத் தொடங்கி வைத்துள்ளார். இந்த அமைப்பின் மூலமாக, பதினொன்று அரசுத் துறைகளிலிருந்து கிடைக்கப்பெறும் முதலீடு தொடர்பான அனுமதிகளை ஒரே இடத்திலிருந்து முதலீட்டாளர்கள் பெற இயலும். 'தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டத்திற்கு' இந்த மாமன்றம் ஒப்புதல் அளிக்கும்போது, அனுமதிகளை உரிய காலத்தில் வழங்கவும், சில குறிப்பிட்ட நேர்வுகளில் கருதப்பட்ட அனுமதியைப் பெறவும் ஏதுவாக ஒற்றைச் சாளர முறை மேலும் வலுப்படுத்தப்படும். இவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிப்பதற்கும், முதலீட்டாளர்களுக்கான குறைதீர்ப்பு அமைப்பாகச் செயல்படுவதற்கும் ஒரு உயர்மட்டக் குழுவையும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

**33.** தமிழ்நாட்டில் முதன்முறையாக, **2015** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு கூட்டப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த மாநாட்டில், **2.42** இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான **98** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொழில் முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், **96,341** பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய, **62,738** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான **61** திட்டங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. முதலீட்டாளர்கள் விரைவில் அனுமதியைப் பெற்று மீதமுள்ள திட்டங்களையும் செயல்படுத்த, 'தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்' மூலம் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**34.** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெருமளவில் வேலை வாய்ப்புகளை அளித்து வருவதால், இந்நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு இந்த அரசு

உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. புதிய தொழில் முனைவோர்களையும், திறன்பயிற்சி முன்முயற்சிகளையும் ஊக்கப்படுத்துவதில் இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசின் புதுமையான ‘புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்’, மாநிலத்தில் சிறுதொழில்களை புதிய தொழில் முனைவோர்கள் தொடங்குவதற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்துள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குத் தேவையான ஆதரவையும், ஊக்கத்தையும் அளிப்பதற்காகவும், தொழில் தொகுப்புகளின் மேம்பாட்டிற்காகவும் நான்கு தொழிற்பூங்காக்களை உருவாக்கும் திட்டப் பணிகள், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் ‘தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டத்தின்’ இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளன. புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக, ‘தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்துடன்’ இணைந்து, தனியார் முதலீட்டாளர்களுக்கும்,

தொழில்துறை அமைப்புகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கும்.

**35.** பொதுமக்கள் ஆரோக்கியமாக வாழத் தேவையான தரமான மருத்துவ வசதியை வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் அமைப்பால் வரையறுக்கப்பட்ட புத்தாயிரம் ஆண்டிற்கான வளர்ச்சி இலக்குகளையும், தேசிய அளவிலான இலக்குகளையும் மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே நமது மாநிலம் எய்தியுள்ள நிலையில், நிலைக்கத்தக்க வளர்ச்சி இலக்குகளையும் (Sustainable Development Goals) வரையறுக்கப்பட்ட **2030** ஆம் ஆண்டிற்குள்ளாகவே தமிழ்நாடு எய்த இயலும். இத்தகைய சாதனை, தமிழ்நாட்டில் பொது மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்காக மாநில அரசு எடுத்த முன்னோடி முயற்சிகளாலேயே சாத்தியமாகியுள்ளது. அரசின் முன்னோடித் திட்டமான, ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’, ஏழை மக்கள்

உரிய நேரத்தில் உயர்தரமான மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதில் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்கள் ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படும்போது ஏற்படக்கூடிய நிதிச் சுமையிலிருந்தும் காத்து வருகிறது. 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தினால்', தாய் சேய் உடல்நிலை அளவீட்டில் ஒரு பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 'மகளிர் சுகாதாரத் திட்டம்', 'அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்' மற்றும் 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' ஆகிய புதுமையான முன்னோடித் திட்டங்கள் இந்த அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இறந்தோரின் உடல் உறுப்புகளை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படுத்துவதில், நாட்டிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதுடன், இதற்கான தேசிய விருதை 2015 முதல் 2017 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து மூன்று ஆண்டுகளிலும் தமிழ்நாடு பெற்றுள்ளது பாராட்டத்தக்கது.

**36.** மாநிலத்தின் நலனையும், நமது மாணவர்கள் மற்றும் மருத்துவர்களின் நலனையும் காக்கும் வகையில் இந்த அரசு ஏற்கனவே முன்வைத்துள்ள கருத்துகளின் அடிப்படையில், மருத்துவத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தேசிய மருத்துவ ஆணையச் சட்ட முன்வடிவில் தகுந்த மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது.

**37.** அனைத்து குழந்தைகளுக்கும் தரமான பள்ளிக் கல்வியை வழங்குவதில் அரசின் உறுதியை நிலைநாட்டும் வகையில், பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளிக் கல்வி எளிதாகக் கிடைக்கச் செய்யவும், நூறு சதவீத பள்ளிச் சேர்க்கையை உறுதி செய்யவும், இந்த அரசு மாணவர்களுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் மடிக்கணினிகள், நான்கு இணை சீருடைகள், பள்ளிப் பைகள்,

காலணிகள், பேருந்துப் பயண அட்டைகள் மற்றும் மிதி வண்டிகளை விலையில்லாமல் வழங்கி வருவதுடன், பள்ளி இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகையையும் வழங்கி வருகிறது. சமூகப் பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் தரமான கல்வியை தனியார் பள்ளிகளிலும் பெறும் வகையில், **2009** ஆம் ஆண்டு 'குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்' செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாறிவரும் சூழ்நிலையில் புதிய சவால்களை எதிர்கொண்டு, பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றிபெற, மாணவர்களைத் தயார் செய்யும் வகையில், இந்த அரசு பள்ளிப் பாடத் திட்டங்களை அனைத்து நிலைகளிலும் உரிய வகையில் மேம்படுத்தியுள்ளதையும், போட்டித் தேர்வுகளைத் திறம்பட எதிர்நோக்குவதற்கான சிறப்புப் பயிற்சிகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதையும் நான் பாராட்டுகிறேன். அரசுப் பள்ளிகளில் கற்பிப்பதில் புதுமையை ஊக்குவிக்கவும், பள்ளிச் செயல்பாடுகளில்

தரத்தை மேம்படுத்தவும், ‘புதுமைப் பள்ளி’ மற்றும் ‘கனவு ஆசிரியர்’ ஆகிய விருதுகளை இந்த அரசு அறிவித்துள்ளது பயனளிக்கும் எனக் கருதுகிறேன்.

**38.** மாநிலத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உயர்கல்வி எளிதிலும், குறைந்த செலவிலும் கிடைக்கச் செய்ய, இந்த அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் பலனாக, தேசிய அளவில் தமிழ்நாட்டில்தான் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ளது. மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் **268** புதிய பாடத்திட்டங்களும், பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளில் **89** புதிய பாடத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, கல்லூரிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. இந்த ஆண்டில், **210** கோடி ரூபாய் செலவில் அரசுக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்திட இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தை ஈடுசெய்வதற்காக இந்த அரசு வழங்கிவரும் நிதியுதவியினால், சமூகத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவிகள், பட்டதாரிகளாக உருவாக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

**39.** பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் போன்ற நலிவடைந்த பிரிவினரின் நிலையினை மேம்படுத்திட இந்த அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கது. திருமண உதவித் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டங்களின் மூலமாக வழங்கப்படும் உதவித்தொகைகள், தொட்டில் குழந்தைத் திட்டம், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு விடுதி வளாகங்கள் போன்ற திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். **விரைவில் தொடங்கப்பட உள்ள, 'பெண்களுக்கு இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின்' கீழ்,**

**ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உதவித்தொகையின் உச்ச வரம்பு, 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.** 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்' கீழ் பள்ளி செல்லும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவையை, 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்' மூலமாக இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

**40.** ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற உயரிய

நோக்கத்துடன், ‘தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்’, ‘தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்’ மற்றும் ‘தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்’ ஆகியவற்றின் மூலமாக வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களைத் தொடங்குவதற்கான பொருளாதார மேம்பாட்டு நிதியுதவியை இந்த அரசு வழங்கி வருகிறது. இதுபோன்ற நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த மாணவர்கள் பயில்வதற்கான பள்ளிகள் மற்றும் விடுதிகளை அரசு தனிக் கவனத்துடன் நடத்தி வருவதுடன், அவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரிடையே சமூக நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதில் நாட்டிலேயே முதன்மை நிலையை தமிழ்நாடு அடைவதற்கு இதுபோன்ற முயற்சிகளே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளன.

**41. கடுமையான நிதிநிலை நிலவி வரும் போதும், அரசுப் பணியாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, 2017 ஆம் ஆண்டைய ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த அரசு ஆண்டிற்கு 14,719 கோடி ரூபாய் கூடுதல் செலவில் ஏற்கனவே ஊதியத் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஊதியத் திருத்தங்களில் கோரிக்கைகள் பல்வேறு தரப்புகளிடமிருந்து வந்த வண்ணம் உள்ளன. இந்தக் குறைகளையும் கோரிக்கைகளையும் பரிசீலிக்க இந்த அரசு ஒரு குழுவை அமைக்கும்.**

**42.** மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் சமூக, பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டி, வறுமை அறவே இல்லாத, வளமும் செழிப்பும் மிக்க தமிழ்நாட்டை உருவாக்குவதை தனது கனவாகக் கொண்டிருந்தார். இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான இந்த அரசும் செயல்பட்டு வருகிறது.

அவரது கனவை நனவாக்கும் வகையில், மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்காகவும், மக்களின் நல்வாழ்விற்காகவும் இந்த அரசு அயராது பாடுபடும்.

**43.** இந்த அரசின் பல்வேறு கொள்கைகளையும், திட்டங்களையும் சுருக்கமாக இங்கு எடுத்துரைத்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்களே, மக்களாட்சியின் மீது தமிழ்நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வகையில், பல்வேறு முக்கியப் பிரச்சினைகளை ஆக்கப்பூர்வமாக விவாதித்து, அவற்றின் மீது இம்மாமன்றம் ஒருமித்த கருத்துகளை எட்டும் என்று நான் நம்புகிறேன். எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை மதிப்பிற்குரிய அனைத்து உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**